**Seat No.**


මගේ අංකය
எனது இல.
My No. VV/4/2/4/7/11/12/14

ඔබේ අංකය
உமது இல
Your No.

දුරකතනය 2853615
தொலைபேசி 2853777
Telephone 2856261
2856262


# ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
# THE OPEN UNIVERSITY OF SRI LANKA


තැපැල් පෙට්ටිය 21
නාවල
නුගේගොඩ

தபால் பெட்டி 21
நாவல,
நுகேகொட

Post Office Box 21
Nawala,
Nugegoda


20 டிசம்பர் 2021

**06 ஜனவரி 2022 01 வது அமர்வு காலை**

சங்கைக்குரிய ஐயா,
அன்புள்ள ஐயா/அம்மணி

**<u>பட்டமளிப்பு வைபவம்</u>**

**<u>முதுகல்விமாணி /ஆசிரியர் கல்வியில் (சர்வதேசம்)</u> <u>முதுகலைமாணி/ இயற்கை விஞ்ஞானங்களில் கல்விமாணி (சிறப்புப்பட்டம்</u> ) நாடகம் மற்றும் அரங்கியல் கல்வியில் <u>கல்விமாணி (சிறப்புப்பட்டம்</u> ) முகாமைத்துவ கற்கைகள் இளமாணி<u>(சிறப்புப்பட்டம்</u> )**

மேற்குறித்த பட்டமளிப்பு வைபவமானது **06 ஜனவரி 2022 அன்று மு.ப. 9.00** மணிக்கு **பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் கொழும்பு 07** இல், நடைபெற உள்ளது.

பட்டமளிப்பு வைபவம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அனைத்துப் பட்டதாரிகளும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

1. 06 ஜனவரி 2022 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு நுழைகின்ற போதும் பட்ட மேலங்கிகளை பெற்றுக்கொள்ளும் போது / மீளளிக்கும் போதும் தேசிய அடையாள அட்டை மற்றும் மாணவர் பதிவுப் புத்தகம் ஆகியவற்றினை உங்களுடன் வைத்திருப்பது கட்டாயமானதாகும்.

2. உங்களது இலக்கம்
   பட்டதாரி பவனி, பட்ட மேலங்கிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளளித்தல் மற்றும் பட்டமளிப்பு வைபவத்துடன் தொடர்புடைய ஏனைய அனைத்து நிகழ்வுகளின் போதும் அனுமதி அட்டையுடன் வழங்கப்படும் மேற்குறித்த இலக்கத்தின் மூலம் நீங்கள் அடையாளப்படுத்தப்படுவீர்கள். எனவே மேற்குறித்த நிகழ்வுகளின் போது அனுமதி அட்டைகளை உங்களுடன் வைத்திருங்கள்.

3. பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி வழங்கல்
   பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி என்பவற்றிற்கான சேகரிப்பு நிலையங்கள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்காக உங்களுடன் பகிரப்பட்ட கூகுள் படிவத்தில் இருந்துபெற்றுக்கொண்ட பதில்களின் அடிப்படையில் மத்திய வளாகம் நாவல மற்றும் பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில் பரீட்சைப் பிரிவானது பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி ஆகியவற்றினை விநியோகிக்கும். மேலதிக

விபரங்களுக்காக பட்டதாரி மேலங்கி விநியோகிக்கும் படிவத்தினைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

- 29, 30 மற்றும் 31 டிசம்பர் 2021 மற்றும் 02 ஜனவரி 2022 ஆகிய தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை பரீட்சைகள் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,நாவல, நுகேகொட இல் இருந்து
- 29, 30 மற்றும் 31 டிசம்பர் 2021 மற்றும் 01 ஜனவரி 2022 ஆகிய தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் இருந்து

பணவைப்பு பத்திரத்துடன் பட்டதாரி மேலங்கி விநியோகிப்பு படிவத்தினை ஒப்படைத்து பட்டதாரி மேலங்கி/தோளங்கி/தொப்பி ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும். இது குறித்த மேலதிக தகவல்கள் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

4. கீழே தரப்பட்ட முறைகளில் புகைப்படங்களுக்கான கட்டணங்கள் செலுத்தப்பட முடியும்:
   - 29, 30 மற்றும் 31 டிசம்பர் 2021 ஆகிய தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை கொழும்பு மற்றும் கண்டி பிராந்திய நிலையங்களில் **அல்லது**
   - பட்டமளிப்பு வைபவத்தில் சுதர்ஷி மண்டபத்தில் (பண்ராடநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு முன்பாக) கட்டணம் செலுத்துவதற்கான கரும பீடங்கள் அமைக்கப்படும்.

     (மேலதிக விபரங்களுக்காக இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் கடிதத்தினை பார்வையிடவும்)

5. பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை வைபவம் நிறைவுபெற்றதும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சேகரிப்பு கரும பீடத்தில் மீளளிக்க முடியும். அல்லது 07, 08 மற்றும் 11 ஜனவரி 2022 ஆகிய தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை அல்லது நாவலவில் அமைந்துள்ள மத்திய வளாகத்தின் பரீட்சைப் பிரிவில் மீளளிக்க முடியும். வைப்பிலிடப்பட்ட பணமானது பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை மீளளித்த பின்னர் திருப்பிச் செலுத்தப்படும். வழங்கப்பட்ட இறுதித் திகதிக்கு முன்னர் பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை மீளளிக்கத் தவறும் பட்சத்தில் பல்கலைக்கழகம் வைப்பிலிடப்பட்ட பணத்தினை தொடர்ந்து வைத்திருக்கும்.

6. ஓத்திகை மற்றும் பட்டதாரி பவனி

   இப் பட்டமளிப்பு வைபவத்தில் ஒத்திகை நிகழ்வு இடம்பெற மாட்டாது. எனினும் நிகழ்வு உரிய நேரத்தில் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு **06 ஜனவரி 2022 அன்று மு.ப.8.00** க்கு ஒன்றுகூடுமாறும் பவனிக்காக உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் இருக்குமாறும் நீங்கள் அன்புடன் வேண்டப்படுகிறீர்கள். எத்தகைய சூழ்நிலையின் கீழும் உங்களது இலக்கத்தினையோ அல்லது இடத்தினையோ மாற்றுவதற்கு நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

7. அனுமதி அட்டை மற்றும் கார் பாஸ்

   இந்தக் கடிதத்துடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு நுழைவதற்காக பட்டதாரிகளுக்கும் அவர்களது விருந்தினருக்குமென ஒரு அனுமதி அட்டையும் ஒரு கார் பாஸ் உம் வழங்கப்படும். எட்டு வயதிற்கு குறைவான பிள்ளைகள் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டர்.

கையடக்கத் தொலைபேசிகள், கமராக்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களை மண்டபத்திற்குள் எடுத்துவருவது கடுமையான முறையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

வைபவம் நிறைவுபெறும் வரை மண்டபத்தினை விட்டு வெளியெறாமல் இருக்குமாறு பட்டதாரிகள் வேண்டப்படுகின்றனர். அனைத்து பட்டதாரிகள் மற்றும் அவர்களது விருந்தினர்கள் ஆகியோர் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தலில் பாதுகாப்பு பணியாளர்களுக்கு ஒத்துழைப்புடன் செயற்படுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

8. புகைப்படங்கள் எடுப்பதனைத் தவிர்த்துக்கொள்ளல்

மண்டபத்தினுள் புகைப்படங்களை எடுத்தலானது கடுமையான முறையில் தடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தினுள் புகைப்படக் கருவிகளை எடுத்துவர எவரும் அனுதிக்கப்பட மாட்டர்.

9. ஒழுக்கம்

வருகைதந்திருக்கும் அனைவரும் அலுவலர் பவனியினைத் தொடர்ந்து இடம்பெறும் வேந்தர் பவனியின் போது எழுந்துநிற்றல் வேண்டும் என்பதுடன் வேந்தர் இருக்கையில் அமரும் வரை நின்றவண்ணம் இருத்தல் வேண்டும். பட்டமளிப்பு வைபவம் நிறைவுபெறும் வரை எவரும் மண்டபத்தினை விட்டு வெளியெறுதல் கூடாது.

பட்டமளிப்பு வைபவத்தினை நிறைவுசெய்வதற்காக வேந்தர் எழுந்திருக்கும் போதும் அவர் மண்டபத்தினை விட்டு வெளியேறும் வரையில் வருகைதந்திருக்கும் அனைவரும் நின்றவண்ணம் இருத்தல் வேண்டும்.

வைபவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலுக்கு இணங்க பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்படும். (வைபவத்தின் போது மண்டபத்தில் அது விநியோகிக்கப்படும்). பெயர்கள் வாசிக்கப்படுவதற்கு முன்னர் பட்டதாரிகள் இருக்கைகளில் இருந்து எழுந்து மேடைக்கு செல்லும் படிகளில் வரிசையாக நின்று பட்டதாரி சுருளினைப் பெற்றுக்கொள்ள வேந்தரிடம் பணிவுடன் செல்லுதல் வேண்டும். அவரிற்கு முன்னர் சிரம் தாழ்த்தி வணங்குதல் வேண்டும். பின்பு உரிய இருக்கையில் சென்று அமர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

10. உடை

ஆண் பட்டதாரிகள் தேசிய உடையொன்று அல்லது நீண்ட சூட் (உதாரணம் ரை மற்றும் கோட்) அணிதல் வேண்டும். பெண் பட்டதாரிகள் பளிச்சிடும் வர்ண உடை அணிவதனை பல்கலைக்கழகம் வரவேற்கிறது. பௌத்த குருமார்கள் தவிர்ந்த அனைத்து பட்டதாரிகளும் பட்ட மேலங்கிகளை அணிதல் வேண்டும். பட்டப்பின் பட்டதாரிகள் மண்ணிற (Brown) பட்ட மேலங்கிகளை அணிதல் வேண்டும்.. பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் பெறுவோர் கறுப்பு நிற மேலங்கியுடன் தோளங்கியினை அணிகின்ற அதே வேளை இளமாணிப்பட்டம் பெறுவோர் தொப்பி ஒன்றுடன் கறுப்பு நிற பட்ட மேலங்கியினை அணிதல் வேண்டும்.

11. குழுப் புகைப்படம்

பட்டமளிப்பு வைபவம் முடிவடைந்த பின்னர் உடனடியாக குழுப் புகைப்படம் எடுப்பதற்காக நீங்கள் வருகைதருதல் வேண்டும். புகைப்படம் எடுப்பது குறித்து இங்கு இணைக்கப்பட்டிருக்கும் கடிதத்தினைப் பார்வையிடவும்..

12. கோவிட்-19 தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக சுகாதார அதிகார சபையினால் வெளியிடப்பட்ட ஒழுங்குகளையும் பிரமாணங்களையும் அனைத்துப் பட்டதாரிகளும் மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்னர் கடுமையான முறையில் பின்பற்றுதல் வேண்டும். அனைத்து பங்குபற்றுனர்களும் மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்னர் சுகாதார பிரகடனப்படுத்தல் படிவத்தினை பூரணப்படுத்தி கையளிக்க வேண்டும். மேலும் நீங்கள் முழுமையாக தடுப்பூசியேற்றப்பட்டதற்கான உத்தியோகபூர்வ ஆவணமாக தடுப்பூசி அட்டையினை எடுத்துவருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

    இருமல், அல்லது காய்ச்சல் போன்ற அறிகுறிகளை நீங்கள் கொண்டிருப்பின் பட்டமளிப்பு வைபவத்திற்கு வருகைதராதிருக்கவும்.

நன்றி.

உண்மையுள்ள

பதில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
பரீட்சைகள்